Puducherry

Regional Bulletin

31.03.2026 18.10hrs

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 31.03.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம், காந்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியத்தை திறந்து வைத்தார்.

மகாவீர் ஜெயந்தி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திலுள்ள 60 சுங்கச் சாவடிகளில் இன்று நள்ளிரவு முதல் சுங்கக் கட்டண உயர்வு அமலுக்கு வரவுள்ளது.

*மோடி -குஜராத் (13 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் பயணம் மேற்கொண்டார். காந்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள சாம்ராட் சம்ரிதி என்ற பெயரிலான அருங்காட்சியத்தை அவர் திறந்து வைத்தார். இந்திய கலாச்சாரத்தின் ஆன்மிக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் இந்த அருங்காட்சியகத்தில்

பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த அம்சங்கள் குறித்து அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. இவற்றை ஆர்வமுடன் கேட்டறிந்த பிரதமர் அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருந்த பழங்கால ஓலைச் சுவடிகளையும் பார்வையிட்டார். தொடர்ந்து,19 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகமதாபாத்தில் அமைக்கப்பட்டிருந்த செமி கண்டக்டர் ஆலையையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார். இதனைத் தொடர்ந்து 20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

*பிரதமர் மோடி அஸ்ஸாம் (16)*

அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த பாஜக தொண்டர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்றிரவு நமோ செயலி மூலம் உரையாடினார். 160 தொகுதிகளைக் கொண்ட அஸ்ஸாம் சட்டப்பேரவைக்கும், 30 தொகுதிகளைக் கொண்ட புதுச்சேரி சட்டப்பேரவைக்கும் ஏப்ரல் மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு அஸ்ஸாம் மாநிலத்திலும், புதுச்சேரியிலும் தேர்தல் களை கட்டியுள்ளது. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தங்களது வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி பாஜக தொண்டர்களுடன் கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி நமோ செயலி மூலம் உரையாடினார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் காரணமாக, மாநிலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்து வருவதாக கூறியுள்ளார். மேலும், அஸ்ஸாமில் 5 வருட இரட்டை எஞ்சின் அரசு ஆட்சி அமைய மக்கள் முடிவு செய்து விட்டதாக கூறினார்.

*பிரதமர் மோடி   அஸ்ஸாம் -2 (04 )*

இதே போன்று கடந்த 5 ஆண்டுகளில் இரட்டை எஞ்சின் அரசு புதுச்சேரி மக்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். ஆகவே மக்கள் மீண்டும் என்.டி.ஏ அரசை தேர்ந்தெடுக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

*திரௌபதி முர்மு   (08 )*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பீகார் மாநிலத்திற்குச் சென்றுள்ளார். பீகாரில் அமைந்துள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் 31 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் நாளந்தா பல்கலைக் கழகம் ஒரு முக்கியப் பங்காற்றும் என்றும் கூறினார். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 2 ஆயிரம் பேர் அமரக்கூடிய கலையரங்கத்தையும் அவர் திறந்து வைத்தார்.

*மகாவீர் ஜெயந்தி- 1   (03 )*

ஜைன மதத்தின் கடைசி தீர்த்தங்கரான பகவான் மகாவீரரின் பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது குறித்த கூடுதல் விபரங்கள்.

… வாய்ஸ் …

*மகாவீர் ஜெயந்தி- வாய்ஸ் -1   (17 )*

… வாய்ஸ் …

இதனையொட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.

நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள அறிக்கையில், பகவான் மகாவீரரின் 5 கொள்கைகளையும், அனைவரும் அவசியம் பின்பற்றி உண்மையான வாழ்க்கை வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நெறிகளைப் பின்பற்றுவதன் மூலம், வாழ்க்கையில் நமக்கு மிகப்பெரிய மாற்றம் கிடைக்கும் என்றும் குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார். குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டுள்ள பதிவில், மகாவீரரின் எக்காலத்திற்கும் பொருந்தும் போதனைகள், சுய கட்டுப்பாடு, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய வாழ்க்கையை நோக்கிப் பயணிக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், மகாவீரரின் போதனைகள், அகிம்சை, சமாதானம் மற்றும் உண்மையின் பாதையில் செல்ல நம்மை தொடர்ச்சியாக தூண்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

*மகாவீர் ஜெயந்தி – வாய்ஸ் 2 (06 )*

மகாவீரரின் கொள்கைகள் ஆன்மிக ரீதியில் மேம்பாடு அடைவதற்கு இன்றைய உலகம் மிகவும் பொருத்தமாக இருப்பதாக பிரதமர் புகழாரம் சூட்டினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில், மகாவீரரின் 5 கொள்கைகள் நமக்கு ஆன்மிக வழிகாட்டியாக திகழ்வதோடு, வலிமையான சமூகத்திற்கு அடித்தளம் அமைப்பதாகவும், இது புதிய தேசத்தை உருவாக்க உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

*ராகுல் கேர□ா (08 )*

கேரள சட்டமன்ற தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர் திரு. ராகுல் காந்தி, கண்ணூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். மத்திய பாஜக ஆட்சியை அவர் கடுமையாக விமர்சனம் செய்தார். மேலும்,

கேரளாவில் ஆட்சியிலுள்ள இடது சாரி கூட்டணி ஆட்சியையும் அவர் விமர்சனம் செய்தார். வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

*தேர்தல் ஆணையம் (14 )*

கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் 2 லட்சத்து 37 ஆயிரம் வாக்காளர்கள் வீட்டிலிருந்தே வாக்களிப்பார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வரும் ஏப்ரல் 9ஆம் தேதி இந்த மாநிலங்களில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வகையில் சிறப்பு ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. இது தொடர்பாக ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 85 வயதுக்கு மேற்பட்ட 28 ஆயிரத்து 60 பேர் வீட்டிலிருந்தே வாக்களிப்பார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது. கேரள மாநிலத்தில் 1 லட்சத்து 45 ஆயிரம் வாக்காளர்களும், அஸ்ஸாம் மாநிலத்தில் 19 ஆயிரம் வாக்காளர்களும், புதுச்சேரியில் 2 ஆயிரம் வாக்காளர்களும் 85 வயதைக் கடந்தவர்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

*மக்கள் தொகை கணக்கெடுப்பு (03 )*

வரும் 2027ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நாளை முதல் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த கூடுதல் விபரங்கள்.

**... வாய்ஸ் ...**

... வாய்ஸ் ...

இது தொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் திரு. மிருதுஞ்சய் குமார் நாராயண் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வீடு வீடாகச் சென்று தகவல் திரட்டப்படும் என்று தெரிவித்தார். இதற்கென தனியாக இணையதளம் ஏற்படுத்தி, அதில் 16 மொழிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து, சாதிவாரி கணக்கெடுப்பு 2ஆவது கட்டமாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*அபர்ணா சர்மா -பெட்ரோல் டீசல்  (08 )*

மேற்காசிய நாடுகளில் பதற்றம் நீடித்தாலும், உரங்கள், பெட்ரோல்,  டீசல், எல்.பி.ஜி. ஆகியவை தேவையான அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக புதுடெல்லியில் நேற்றிரவு செய்தியாளர்களிடம் பேசிய உரங்கள் துறை கூடுதல் செயலர் திருமதி அபர்ணா சர்மா, நாட்டிற்குத் தேவையான யூரியா 80 சதவிகிதம் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார். வளைகுடா நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் யூரியா இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*சுங்கச்சாவடி கட்டணம்  (09 )*

தமிழகத்திலுள்ள 60 சுங்கச் சாவடிகளில் இன்று நள்ளிரவு முதல் 5 சதவிகிதம் முதல் 7 சதவிகிதம் வரை கட்டண உயர்வு அமலுக்கு வரவுள்ளது. கார் மற்றும் வேன்களுக்கு 10 ரூபாய் முதல் 40 ரூபாய் வரையிலும், பேருந்து மற்றும் லாரிகளுக்கு 50 ரூபாய் முதல் 200 ரூபாய் வரையிலும் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட வாய்ப்புள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள சுங்கச்சாவடிகள் மூலம் 18 ஆயிரத்து 805 கோடி ரூபாய் ஈட்டப்பட்ட நிலையில், பராமரிப்பு மற்றும் பணவீக்கத்தைக்

கருத்தில் கொண்டு இந்த ஆண்டிற்கான மாதாந்திர மற்றும் வருடாந்திர பாஸ் கட்டணங்களும் உயர்த்தப்படவுள்ளன.

*புதுச்சேரி தேர்தல் துறை (07)*

அரியாங்குப்பம் மற்றும் மணவெளி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிகளைக் கண்காணிக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தால், திரு. மிருனாள் காந்தி தாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் நடத்தும் அதிகாரி செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இவ்விரு தொகுதிகளில் தேர்தல் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை பொதுமக்கள், நோணாங்குப்பம், அரசு மேல்நிலைப்பள்ளியில், தினமும் பிற்பகல் 3 மணியிலிருந்து 4 மணி வரை அவரை நேரில் சந்தித்து விளக்கம் அளிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*மோடி – பீகார் -நா□ந்தா விபத்து (09)*

பீகார் மாநிலம், நாளந்தா மாவட்டத்தில் நடந்த விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக வலைதளப் பதிவில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்தனை செய்வதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து 2 லட்ச ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

*கிரிக்கெட் (03 )*

ஐபிஎல் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் இன்று மோதுகின்றன. இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்கவுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று குஜராத் மாநிலம், காந்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியத்தை திறந்து வைத்தார்.

மகாவீர் ஜெயந்தி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டிலிருந்தே வாக்களிப்பார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திலுள்ள 60 சுங்கச் சாவடிகளில் இன்று நள்ளிரவு முதல் சுங்கக் கட்டண உயர்வு அமலுக்கு வரவுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது BI/CN/VM